செ.வெ.எண்: 466/2020 நாள்: 18.10.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினர்களுக்கான 222 பதவியிடங்களுக்கான மறைமுகத் தேர்தல்கள் நடத்துவது குறித்த அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினர்களுக்கான 222 பதவியிடங்களுக்கான மறைமுகத் தேர்தல்கள் நடத்துவது குறித்த அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி ஊரக உள்ளாட்சி தேர்தல்-2021 கடந்த 06.10.2021 அன்று முதற்கட்டமாக கந்திலி, திருப்பத்தூர், நாட்றம்பள்ளி, சோலையார்பேட்டை ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 09.10.2021 அன்று இரண்டாம் கட்டமாக ஆலங்காயம் மற்றும் மாதனூர் ஆகிய 2 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஊராக உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. அதனடிப்படையில் திருப்பத்தூர் மாவட்டத்தில் புதியதாக தேர்தெடுக்கப்பட்டுள்ள 13 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், 124 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள், 208 கிராம ஊராட்சி மன்ற தலைவர்கள் வருகின்ற 20.10.2021 காலை 10 மணியளவில் பதவியேற்பு, உறுதிமொழி நிகழ்ச்சி தேர்தல் நடத்தும் நடைபெறவுள்ளது.

மேலும் ஒரு மாவட்ட ஊராட்சித் தலைவர் பதவியிடத்திற்கும், ஒரு மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர் பதவியிடத்திற்கும், 6 ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பதவியிடங்களுக்கும், 6 ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் பதவியிடங்களுக்கும் மற்றும் 208 ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பதவியிடங்கள் என மொத்தம் 222 பதவியிடங்களுக்கான மறைமுகத் தேர்தல் வருகின்ற 22.10.2021 அன்று நடைபெறவுள்ளது. மேற்படி மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் துணை தலைவர் பதவியிடங்களுக்கான தேர்தல் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைத்தீர்வு கூட்டரங்கிலும், ஒன்றியக்குழு தலைவர் மற்றும் துணை தலைவர் பதவியிடங்களுக்கான தேர்தல் சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி

அலுவலகளிலும், 208 ஊராட்சி மன்ற துணை தலைவர்கள் பதவியிடங்களுக்கான தேர்தல் சம்மந்தப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது.

மேலும் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில் தேர்தல் கூட்டம் நடைபெறும். தலைவர் பதவிக்கு படிவம் எண்.27-இல் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட் வேண்டும். கூட்டத்துக்கு வருகை தந்த உறுப்பினர்களுள் ஒருவர் வேட்பு மனுவில் முன்மொழிய வேண்டும் மற்றொருவர் வழிமொழிய வேண்டும். மேலும் மாவட்ட ஊராட்சி தலைவர், ஊராட்சி ஒன்றிய தலைவர் பதவியானது ஆதிதிராவிட வகுப்பினர் அல்லது பழங்குடியினர் அல்லது ஆதிதிராவிட வகுப்பு பெண்கள் அல்லது பழங்குடி இனத்தை சேர்ந்த பெண்கள் அல்லது பெண்கள் (பொது)க்கு ஒதுக்கப்பட்டுள்ள நேர்வுகளில் வேட்பாளர் குறிப்பிட்ட வகுப்பை சார்ந்தவர் என்ற உறுதி மொழியினை அளித்தி வேண்டும். பெறப்பட்ட வேட்பு மனுக்களில் தகுதியானவை/தகுதியற்றவை என்பதனை தேர்தல் நடத்தும் அலுவலர் பதிவு செய்திட வேண்டும். ஒரு வடிவம் மற்றும் வண்ணத்தில் 28ஏ எனும் படிவத்தில் வாக்குச் சீட்டுகளை தேர்தல் நடத்தும் அலுவலர் தயார்செய்ய வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலர் வழங்கப்படும் அம்புக்குறி இரப்பர் முத்திரைக் கொண்டு வாக்கு பதிவு செய்ய வேண்டும். வாக்குப் பதிவு முடிந்த பின்னர் உறுப்பினர்கள் முன்னிலையில் வாக்கு எண்ணி பதிவு செய்யப்பட வேண்டும்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களில் சமூக இடைவெளியை கடைபிடித்தும், முகக்கவசம் அணிந்தும், கிருமிநாசினி அல்லது சோப்பு பயன்படுத்தி அடிக்கடி கைகளை சுத்தம் செய்தல் போன்ற கொரோனா முன்தடுப்பு பணிகளை அவசியம் பின்பற்றி இந்த மறைமுக தேர்தல்களை நடத்தப்பட வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இப்பயிற்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.செல்வராசு, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.உமாமகோஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.செல்வன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு.ஹரிஹரன், அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**